1522 22
MADRAS

REGD. No. M. 2913. ARYA DHARMAM
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்ப்ரிதி ஓரணா
மாதிரிப்ப்ரிதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஸு ஆவணி-மீ 21௳ 1940-ஸு செப்டம்பர்-மீ 5௳ | ஸ-35

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தீ ஊர்வலத்தில் கல்லெறி

ஹிந்து போலீஸ்காரர் கொல்லப்பட்டார்

டெல்லி மஹம்மதியர் மூர்க்கத்தனம்

டெல்லியில் ஹிந்துக்கள் ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீகிருஷ்ண படத்துடன் பெரிய ஊர்வலமொன்றை நடத்தினார்கள். ஊர்வலம் ஒரு மசூதி முன்பாக வரும்போது மஹம்மதியர்கள் கல்லெறிந்து மண்ணை வாரியடித்தும் ஊர்வலத்தில் அட்டூழியம் செய்தார்கள். அங்கு காவலுக்கு வந்திருந்த ஸர்தார் அமார் சிங் என்ற போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரை ஒரு மஹம்மதியன் கத்தியால் குத்திக் கொன்று விட்டான். அவனும் வேறு பலரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியப் பிரிவினைக்கு ஸி. ஆர். ஆதரவு?

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியர் 29௳ யன்று சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் ஜின்னாவினுடைய பிரிவினை திட்டத்தை ஆதரித்து அவர் பேசியதாவது:—

"நான் இன்னும் அதிகப்படியாகக்கூட போகத்தயாராகயிருக்கிறேன். யுத்தம் முடிந்த பிறகு, பொது ஜனங்கள் பாகிஸ்தான் திட்டம் (பிரிவினை) வேண்டுமென்று நிச்சயமாக வற்புறுத்தினால் அந்த பிரிவினை ஏற்படட்டுமே என்றே நான் கூறுகிறேன். யுத்தத்திற்கு முந்தியே அதற்கு என்ன அவஸரம்"

ஸுபாஷ்போஸ் விடுதலையில்லை

ஹால் வெல் ஞாபகச்சின்ன எதிர்க்கிளர்ச்சிக்காக கைது செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீமான் போஸ் சீக்கிரத்திரத்தில் விடுதலை செய்யப்படுவாரென்ற வதந்தியை வங்க ஸர்க்கார் மறுக்கிறார்கள்.

ஸ்ரீ போஸ்மீது பாதுகாப்புச் சட்டத்தின்படி கேஸ் கொடுக்கப்பட்டு விசாரணை ஆரம்பமாயிருக்கிறது.

சட்ட ஸபை காங்கிரஸ் கக்ஷி கூட்டம்

அதிசய ஸம்பவம் ஏற்படுமாம்

சட்ட ஸபைத் தலைவரின் அறிக்கை

சென்னை சட்ட ஸபைக் காங்கிரஸ் கக்ஷியாரின் கூட்டம் சென்ற வாரம் ஸி. ராஜகோபாலாசாரியர் தலைமையில் நடந்தது. வார்தா காரியக்கமிட்டித் தீர்மானத்தை ஆதரிப்பதாக அதில் தீர்மானிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் தீவ்ரமாக காங்கிரஸ் பிரசாரம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

சட்ட ஸபைத் தலைவரான ஸ்ரீமான் புலுசு ஸாம்பமூர்த்தி கவர்ன்மெண்ட் கார்யாலயத்திலுள்ள தமது ஆபீஸுக்குப் போய் வேலை செய்கிறாராம். மந்திரிகள் ராஜிநாமாவுக்குப் பிறகு இப்போது தான் அங்கு சென்றிருக்கிறார். சட்ட ஸபை விதிகளைத் தாம் பரிசோதித்துப் படித்து வருவதாயும் சீக்கிரத்தில் அதிசய ஸம்பவம் ஏதாவது ஏற்படுமென்றும் அவர் சொன்னாராம். சட்ட ஸபை கூட்டப்படும் போலும்?

நாகப்பட்டினத்தில் ஸ்ரீமத் பாகவத உபன்யாஸங்கள்.

சென்ற 22—8—40 குருவாரத்தன்று ஆரம்பித்து, நாகப்பட்டிணம் நாஷனல் ஹைஸ்கூலில் பிரம்மஸ்ரீதேவங்குடி சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீமத் பாகவத உபன்யாசங்கள் நடத்திவருகிறார்கள். அவர்களுடைய அளவற்ற படிப்புடன் பக்தி புரஸ்ஸரமாக நடத்தப்பட்டுவரும் உபன்யாசங்கள் கேழ்பவர்கள் மனதை பரவசமாகச்செய்து வருகிறது. பிரதிதினம் காலையில் வக்கீல் குமாஸ்தா கஞ்சனூர் ராமஸ்வாமி அய்யருடைய கிரஹத்தில் மூலபாராயணம் நடைபெற்று வருகிறது. பரம அநுக்ரஹ கிரந்தங்களாக விளங்கும் ஸ்ரீ மத்ராமாயணம் ஸ்ரீமத் பாகவதம் இவைகளில் அனாவசியமாக சர்ச்சைகளை கிளப்பிவிட்டு விருதாகாலக்ஷேபங்கள் ஏற்படும் இக்காலத்தில் கேவலம் பக்தியை முன்னிட்டு செய்யப்படும் இவ்வித உபன்யாசங்கள் மிகுதியான பலனை அளிக்குமென்பதில் எவ்வித ஆக்ஷேபணையும் இல்லை.

என். சாம்பசிவய்யர்
வக்கீல்.

கடன் கொடுப்பவர்களுக்கு லைஸென்ஸ் நிர்பந்தம்

கூட்டுறவுக் கமிட்டி சிபார்சு!

சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்கத்தை விருத்தி செய்யவும் வியவஸாயிகளுக்கு நில அடமான பாங்குகளால் அதிக நன்மை செய்து வைக்கவும் சென்னை ஸர்க்கார் நியமித்திருந்த கூட்டுறவுக் கமிஷன் தனது ரிபோர்ட்டை வெளியிட்டுள்ளது. அதில்

கடன் கொடுப்பவர்களான தனிப்பட்ட லேவாதேவிக் காரர்களுக்கு கவர்ன்மெண்டார் லைஸென்ஸ் நிர்பந்தம் ஏற்படுத்த வேணுமென்றும் வட்டிகளை நிர்ணயிக்கும் உரிமை ஸர்காருக்கு இருக்கவேணுமென்றும் தொடர் வட்டி போடுவதை தடுக்க வேணுமென்றும எந்த ஸமயத்திலும் லேவாதேவிக்காரர் கணக்குகளைப் பரிசோதனை அதிகாரசெய்யமிருக்கவேணுமென்றும்சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

THE SANATANA DHARMA
OR
THE HINDU VIEW OF LIFE
BY
SRI SANKARACHARYA
of
SRI KANCHI KAMAKOTI PITHAM
Translated from the original in Tamil
BY
V. R. SUNDARARAMAN, M.A.
With a Foreword by
Sir MANMATHANATH MUKERJEE, Kt.
Ex-Chief Justice, High Court, Calcutta.
Price Rs. 1-8-0... Postage extra.

ஸ்ரீமஹாபாரதச்சுருக்கம் ஆதிபர்வம்
ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணா 0 8 0

For Copies Apply to:—
The Manager,
SRI JANARDANA PRINTING WORKS, LTD.,
KUMBAKONAM.

ராமாயணம்—தர்மசாஸ்திரம்

(வி. பஞ்சாபகேசய்யர் சேங்காலிபுரம்)

நானாவித ஆசாரங்கள் அபிலாஷைகள் மனோபாவங்கள் கொண்ட ஜனங்கள் நிறைந்துள்ளது இவ்வுலகம். அவர்கள் நல்லது கெட்டதுகளை யறிந்து கெட்டவைகளை விலக்கி நல்லவைகளை பின்பற்றி கடைத்தேற சுருதி ஸ்மிருதிகள் ஏற்பட்டிருக்கின்றன. சுருதிஸ் மிருதிகளை எல்லோரும் அறிந்து கொள்ள இயலாது. அவைகளை யறிந்தவர்கட்கும் தர்மாதர்மங்களைப் பற்றிய சந்தேகங்கள் தோன்றக்கூடும். இவைகளையெல்லாம் விளங்க வைக்கவும், எல்லாவித ஜனங்களும் ருசியுடன் தர்மாதர்மங்களை யறிந்து அனுஷ்டித்து கடைத்தேற வேண்டியுமே ராமாயணம் ஏற்பட்டிருக்கிறது. தர்ம லக்ஷணத்தை மனு நான்கு விதமாகப் பிரித்திருக்கிறார்.

வேத: ஸ்ம்ருதி: ஸதாசார: ஸ்வஸ்ய ச ப்ரியமாத்மன: । ஏதச்சதுர்விதம் ப்ராஹு: ஸாக்ஷாத்தர்மஸ்ய லக்ஷணம் ।

தர்மத்துக்கு (1) வேதம் (2) ஸ்மிருதி (3) சிஷ்டர்களின் நடத்தை (4) நல்லவர்களின் மனப்பிரவிருத்தி ஆகிய இந்நான்கும் பிரமாணங்கள். இவைகளில் பிந்தியவைகளைவிட முந்தியவைகள் பலமுள்ளவை முந்தியவைகளில் தெளிவாகாமலிருப்பவைகளை பிந்தியவைகளைக் கொண்டு அறிந்து கொள்ள வேண்டியது. இந்த ரீதியில் மூன்றாவது பிரமாணமான சிஷ்டாசாரத்தைக் காட்டி சுருதிஸ்மிருதிகளின் அர்த்தத்தை விளங்கவைக்கவே தர்மம் தவறாமல் நடத்திக்காட்டிய ஒரு உத்தம புருஷ சரித்திரத்தை இனிய ரஸமான நடையில் ராமாயணமாக வால்மீகி பகவான் எழுதியருளியிருக்கிறார்.

முன் வியாசத்தில் வாலிவதத்தைப்பற்றி எழுதிய போது அதில் தர்ம சூட்சுமம் நிரூபிக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டிருந்தேன். சாதாரணமாய் பார்க்கும்போது வாலிவதம் தர்மமா வென்பதில் சந்தேகம் தோன்றுவது இயற்கை. அதைப்பற்றிய வால்மீகியின் வர்ணனை அதிலுள்ள தர்ம ரகசியங்களை விளங்கச் செய்கிறது. இதே மாதிரி ராமாயணம் முழுமையும் தர்ம விமர்சனங்கள் நிறம்பி கிடக்கின்றன. உதாரணமாக ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் தெரிவிக்கின்றேன்.

“ஸத்யம்வத” சத்தியத்தைப் பேசு என்று வேதம் கட்டளையிடுகிறது. ராமர் சத்திய ஸந்தர். மேலும் தகப்பனார் சொல் மீறாதவர் காட்டுக்குப் போகையில் சுமந்திரர் ரதம் ஓட்டுகிறார். ரதத்தை நிறுத்து என்று தசரதர் கதறுகிறார். ஓட்டு ஓட்டு என்று ராமர் உத்திரவிடுகிறார். சுமந்திரர் பாடு திண்டாட்டமாகிவிட்டது. இந்நிலையில் ராமர் சுமந்திரருக்கு யுக்தி சொல்லிக் கொடுக்கிறார். “அரசர் கோபித்தால் காதில் விழவில்லையென்று சொல்லிவிடும். ரதத்தை ஓட்டும்,, என்கிறார் சாதாரணமாக கவனிக்கும்போது இவ்விடத்தில் ஸ்ரீ ராமன் தகப்பனார் சொல்மீறியதைப்பற்றியும் அஸத்தியத்தைப் பேசத் தூண்டியதைப்பற்றியும் தர்மமாவென்பதில் சந்தேகம் தோன்றக்கூடும். இம்மாதிரி விடங்களில் இப்படி நடந்து கொள்வது தான் தர்ம மென்று விளங்க வைப்பதற்காகவே ராமாயணம் ஏற்பட்டிருக்கிறது. அதனாலேதான் தர்மத்தைப்பற்றிய சந்தேகம் தோன்று மிடங்களிலெல்லாம்

“ராமவத் வர்திதவ்யம் ந ராவணவத் ।”

ராமன் நடந்து கொண்டபடி நடக்கவேண்டியது தான் தர்மம்,, என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

மேலும் ராமாயணம் வேதார்த்தப் பிரதிபாதகமான கிரந்த மென்பதற்கும் சிஷ்டாசார ரூபமாக தர்மத்தை விளங்கவைக்கும் சாஸ்திர மென்பதற்கும் ராமாயணத்திலுள்ள அடியிற்கண்ட ஆதாரங்களும் குறிப்பிடத்தக்கவை:

ஆரம்ப சுலோகத்திலேயே

‘தப: ஸ்வாத்யாய நிரதம், வாக்விதாம்வரம்’

என்ற விசேஷணங்கள் நாரத மகாமுனிக்குச் சொல்லப்பட்டதிலிருந்து வேதார்த்தப்பிரதி பாதகமான கிரந்தம் எழுதவேண்டியே வால்மீகி நாரதரை வினவினார் என்பது வெளியாகிறது.

அடுத்தாற்போல் உலகத்தில் தற்காலம் நல்லகுணசீலனும், வீர்யமுள்ளவனும், தர்மம் தெரிந்தவனுமான புருஷன் யார் என்று நாரதரை வால்மீகி கேட்கிறார். நாரதர் பதிலில் “தர்மஜ்ஞ: தர்மஸ்ய பரிரக்ஷிதா ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய

“தர்மமறிந்தவர் ராமன்” “உலகத்தில் தர்மத்தை காப்பாற்றுகிறவர்” “தன் தர்மத்தை (துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் முதலிய க்ஷத்திரியதர்மங்களை) நழுவாமல் அனுஷ்டிப்பவர்” என்று மூன்று விடங்களில் சொல்லுகிறார் இன்னும் மத்தியில்

“சாதுர்வர்ண்யம் ச லோகேஸ்மின் ஸ்வே ஸ்வே தர்மே நியோக்ஷ்யதி”

இந்த லோகத்தில் நான்கு வர்ணங்களையும் அதனதன் தர்மத்தில் நிலைக்கும்படி செய்யப்போகிறார் ராமன் என்கிறார். கடைசியில் ராமாயணத்தைப்பற்றி

“புண்யம் வேதைஶ்ச ஸம்மிதம்”

வேதங்களுக்கு சம்மதமான புண்ணிய கிரந்தம்,, என்கிறார்.

பிருஹ்மா வால்மீகிக்கு உபதேசம் செய்யும் போதும்

“தர்மாத்மனோ குணவதோ லோகே ராமஸ்ய தீமத:”

“தர்மாத்மாவும் குணவானுமான ராமனுடைய சரித்திரத்தை நாரதரிடமிருந்துகேட்டபடியே செய்யும்” என்று உத்திரவிடுகிறார்.

ராமாயணத்தைச் செய்தபிறகு அதைப் பிரகடனம் செய்வதைப்பற்றி யோசிக்கும் தருணத்தில்

ஸ து மேதாவினௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ । வேதோபப்ருஹ்மணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: ॥”

வேதத்தில் ஈடுபட்டவர்களும் மேதாவிகளுமான குசலவர்களைப்பார்த்து வேதத்தின் சூட்சுமார்த்தங்களை யறிந்து பிரகடனம் செய்யத்தக்கவர்களாக அவர்களை ஏற்றுக் கொண்டார் வால்மீகி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆரண்யகாண்டத்தில் மாரீசன் ராவணனிடம் சொல்லும் போது

“ராமோ விக்ரஹவான் தர்ம:”

தர்மமே உருவெடுத்து வந்தவன் ராமன் என்கிறான்

யுத்தகாண்டத்தில் சுகன்

“யஸ்மின் ந சலதி தர்மோ யோ தர்மம் நாதிவர்த்ததே”

ராமனிடத்தில் தர்மம் நழுவுவதில்லை ராமனும் தர்மத்தை அதிக்கிரமிப்பதில்லை என்கிறான்.

அயோத்தியாகாண்டத்தில் ராமன் தன்னைப்பற்றிச்சொல்லும் போதே

“வித்தி மாம் ருஷிபிஸ்துல்யம் கேவலம் தர்மமாஸ்திதம்”

ரிஷிகளைப்போல் தர்மத்தை மட்டுமே அனுசரிக்கும் ஒருவனாக என்னை அறியுங்கள் என்கிறார்.

யுத்தகாண்டத்தில் பிரும்மா ராமனைப்பார்த்து

“லோகானாம் த்வம் பரோ தர்ம:”

லோகத்துக்கெல்லாம் நீ உயர்ந்த தர்மம் என்கிறார்.

மேற்கண்ட ஆதாரங்களிலிருந்து ராமன் தர்ம ஸ்வரூபி என்றும் ராமாயணம் தர்ம சாஸ்திர மென்றும் கொள்வது தான் சரி என்றேற்படுகிறது.

லால்குடியில் அத்வைத பாடசாலை

லாலுகுடியில் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ சந்திரசேகர ஸரஸ்வதி ஆசாரயாளால் பிரதிஷ்டை செய்த ஆதிசங்கராசார்யாள் ஸந்நிதியில் முன்பு நடந்த அத்வைத வேதாந்த பாடசாலையை புனருத்தாரணமாக விக்ரம-௵ சித்திரை-௴ 30-உ (12—5—50) ஞாயிற்றுக்கிழமை ஆதிசங்கராசார்யஜயந்தி தினத்தில் ஸ்ரீ ஸரஸ்வதி வித்யாஸ்தானம் என்னும் பாடசாலை ஆரம்பித்து ஷை பாடசாலையில் அக்ஷராப்யாஸம் முதல் ஸாஹித்யம், தர்க்கம், மீமாம்ஸை, வேதாந்தம் முதலான சாஸ்திரப்ரவசனம் நியாயவேதாந்த வித்வான் வாளாடி சுந்தரேச சாஸ்திரிகள் அவர்களைக்கொண்டு நடப்பதால், ஆஸ்திகர்கள் அனைவரும் விஜயம்செய்து தங்களுடைய புத்திரர்களையும் அனுப்பிவித்து, ஷை பாடசாலை அபிவிருத்திக்காக ஷை வித்வானைக்கொண்டு கிராமந்தோறும், மாதந்தோறும் மதவிஷய உபந்யாஸம் செய்வித்து ஸத்கர்மானுஷ்டான விஷயங்களைத் தெரிவித்து ஆஸ்திகர்களுடைய தனதான்யங்கள் உதவியால் சிஷ்யர்களுக்கு போஜனமும், உபாத்தியாயருக்கு திரவிய ஸௌகரியமும் செய்துவைக்க, ஆசார்யபக்திமான்கள் உதவி புரியவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

L. D. ராமச்சந்திர அய்யர் ரிடையர்டு இஞ்சினீயர், லால்குடி. L. M. கணபதி அய்யர் ரிடையர்டு இஞ்சினீர், லால்குடி L. K. சப்தரிஷி அய்யர் B Com, லால்குடி. S ராமதாஸ் M. A., லால்குடி.

விருத்தாசலம்.

காஞ்சீபுரம் வாசியான பிரம்மஸ்ரீ நைஷ்டிக பிரம்மசாரி ஸ்ரீ ராமனாத சாஸ்திரிகள் அவர்களால் அக்கிராகாரவேத பாராயண மடத்திலும் ஸ்ரீ பழமலைநாதர் சன்னிதானத்திலும் சந்தியாவந்தனத்தைப்பற்றியும் காயத்ரீ மகிமைப்பற்றியும் தெய்வ பக்தி என்பதைபற்றியும் அநேக வேத சாஸ்திரங்களுடன் பிராமண்யம் கொடுத்து சிறப்பாக உபன்யாசம் செய்தார்கள்.

இவ்வூர் வாசிகள் எல்லாரும் பக்தி சிரத்தையோடு கேட்டு ஆனந்தம் அடைந்ததுடன் அவர்களுக்கு மேலும் மேலும் அனுஷ்டானங்களில் சிரத்தையும் தெய்வ பக்தியும் உண்டாகும்படி ஈச்வரனை ப்ராத்திக்கிறோம். (ந-நி)

இந்திரஜித்தின் மாயா யுத்தம்

புகையைக்கிளப்பி ஆகாச விமானத்தை மறைத்து கொள்ளல்

(Y. மஹாலிங்க சாஸ்திரி, எம். எ., பி. எல்., அண்ணாமலை நகர்.)

இப்பொழுது ஐரோப்பாவில் கோரமான யுத்தம் நடக்கின்றது. இதில் பெரும்பாலும் ஆகாய விமானங்களை உபயோகப்படுத்தப்படுகின்றன. தரைச்சண்டை, தண்ணீர்ச் சண்டை இவைகளின் காலம் அநேகமாய் போய்விட்டது. இப்பொழுது ஆகாயத்தில் தான் பலமான யுத்தம். இதன் மூலம் நடக்கக்கூடிய த்வம்ஸங்கள், பயங்கரமானவை. நிலச்சண்டை, கடல் சண்டை இவைகளினால் ஏற்படக்கூடியதை விட அதிக விரைவிலும் நெடுந்தூரங்களிலும் மிகப்பெரிதும் கோரமுமான ஜனச்சேதம், பொருள்சேதம் நகரம் முதலான ஸம்ஸ்தாபனங்களின் சேதம், இவைகள் விளைவிக்கப்படுகின்றன இந்த யுத்தத்திற்கு தற்கால விக்ஞான சாஸ்திரமானது, மிகவும் துணையாக இருக்கின்றது. ஜலத்தில் காதவழியேனும் மூழ்கி அடித்தளத்தில் கப்பல்களை உடைக்கும் வெடிகுண்டுகளைப்பரத்தவும் புகைப்படலங்களை சிருஷ்டித்துக்கொண்டு அதன் மறைவில் பல மைல் தூரம் சஞ்சரிக்கவும் பூமட்டத்திலிருந்து முப்பது நாற்பதாயிரம் அடிகளுக்கு மேல் ஆகாயத்தில் சகல யுத்த தளவாடங்களுடனும் பறக்கவும் பல மைல் தூரங்களிலிருந்து ஜனத்வம்ஸத்திற்கு ஹேதுவான வெடிகுண்டுகளை வீசவும் இன்னும் விவரித்துச் சொல்லமுடியாத. பற்பல கோரச் செயல்களை விளைவிக்கும் கருவிகளையும் இந்நாகரீக விக்ஞான சாஸ்திரம் முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாட்டவர்களுக்கு கற்றுக்கொடுத்து கற்ற வித்தை உடன் பயக்குமாறு மகாப்ரளயத்திற்கு ஒப்பான யுத்தத்தையும் வரவழைத்துக் கொடுத்திருக்கிறது. இக்காலத்திய யுத்த வரலாறுகளை ஆலோசிப்பவர்களுக்கு நம் புராணங்களில் வர்ணிக்கப்பட்ட இந்திரஜித் முதலானவர்களுடைய மாயா யுத்தம் என் யதார்த்தமாக இருக்கக்கூடாதென்று தோற்றலாம், ஸ்ரீ ராமாயணத்தில் இந்திரஜித் யுத்தம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதைசற்று பரிசீலனை செய்து பாருங்கள்.

हुत्वाग्निं तर्पयित्वाच देवदानव राक्षसान् ।
आरुरोह रथश्रेष्ठं अन्तर्धानगतं शुभम् ॥
स तु वैहायसं प्राप्य सरथो रामलक्ष्मणौ ।
अचक्षु र्विषये तिष्ठन् विव्याध निशितैःशरैः ॥
स हि धूमान्धकारं च चक्रे प्रच्छादयन्नभः ।
दिशश्चान्तर्दधे श्रीमान्नीहारतमसा वृताः ॥
नैव ज्यातल निर्घोषो न च नेमिखुरस्वनः ।
शुश्रुवे चरतस्तस्य नच रूपं प्रकाशते ॥
घनान्धकारे तिमिरे शिलावर्षमिवाद्भुतम् ।
स ववर्ष महाबाहुः नाराचशरवृष्टिभिः ॥
यतो हि ददृशाते तौ शरान्निपततः शितान् ।
ततस्तु तौ दाशरथी ससृजातेऽस्त्रमुत्तमम् ॥
नास्य वेद गतिं कश्चित् न च रूपं धनुःशरान् ।
न चान्य द्विदितं किंचित् सूर्यस्येवाभ्र संप्लवे ॥

ரதத்துடன் இந்திரஜித் ஆகாயத்தில் மறைந்து நின்று யுத்தம் செய்தான். ஆகாயத்தில் புகைப்படலத்தை ஸிருஷ்டித்து அதில் மறைந்திருந்தான். கிருத்ரிமமான ஆவரணத்தை அவன் உண்டுபண்ணினதாகத் தோன்றுகிறது. ஊர்த்வமுகமான ஸ்ரீ ராம பாணங்களை விட்டுத் தப்பி ஓட அவன் வெகு வேகமாய் தன் ஆகாய ரதத்தை நாலா திக்குகளிலும் செலுத்தினான். மேகங்களின் பின் இருக்கும் சூரியனைப்போல் இருந்துகொண்டு யுத்தம் செய்யும் அவனுடைய சஞ்சாரங்களை யாராலும் அறிய முடியவில்லை.

புராணக்கதை புளுகல்ல.

சிலர் புராணத்தில் சொல்லப்பட்டவை எல்லாம் புளுகு என்று சாதிப்பார்கள். ஒரு பாதிரி ராமாயணத்தில் புஷ்பக விமானத்தைப் பற்றி கூறியிருப்பதை இது கவி, கல்பனை. தத்வமல்ல. கவியின் கல்பனா சக்திக்கு வேண்டுமானால் ஸம்மதி கொடுப்போம். அத்தகைய ஆகாய விமானம் முன்னொருகாலத்தில் இருந்ததாக நம்ப முடியாது என்று முடிவு கட்டினார். அது போல இந்திரஜித் யுத்தமும் கவியின் கல்பனா சக்தியைத் தவிர வேறொன்றையும் விளக்கவில்லை என்று சிலர் சொல்லத்தான் சொல்லுவார்கள். அக்காலத்திய விருத்தாந்தத்தை கவி சொல்லாமல் நம்ப மறுப்பவர்களுக்கு எத்தகைய அத்தாக்ஷியை நாம் இன்று எடுத்துக் காட்ட முடியும்? முடியாதாகையினால் நாம் வாக்குவாதம் செய்யத் துணியோம். ஆனாலும் எதிர்நோக்கமுடையவரை மறுபடி ஆலோசிக்கும்படி வேண்டிக்கொள்வோம்.

ஐயா முற்காலம் என்பது எது?

சுமார் ஐயாயிரம் அல்லது மூவ்வாயிரம் வருஷத்திற்குள். அதற்கு முன் இப்புவியில் மனிதர்கள் இருந்தனரா இல்லையா? இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் நாகரீகம் அறியாதவர். காட்டில் குரங்குகளைப்போல் திரிந்து வயிர் வளர்த்து வந்தனர்.

அவ்விதம் எவ்வளவு காலம் இருந்தனர்?

சொல்ல முடியாது.

பூமி உற்பத்தி எக்காலத்தில்?

பூமி உற்பத்தி எக்காலத்திலானாலும் சுமார் இருபதாயிரம் வருடங்களுக்குமுன் பூமண்டலத்தில் மனித வர்க்கம் வசிக்க முடியாது. பனிக்கட்டி மூட்டம் இருந்தது

நல்லது! எங்கள்கொள்கைப்படி ஜீவராசிகள் இல்லாத காலம் ப்ரளயகாலம். இப்ரளய காலத்திற்கு முன் பூமண்டலம் இருந்ததா இல்லையா?

தெரியாது.

காலம் எப்பொழுது ஓட ஆரம்பித்தது?

காலத்திற்கு ஆரம்பம் எது. அது அனாதி. ஆனால் இந்த அனாதியான காலத்தில் சுமார் மூவ்வாயிரம் வருஷத்திய மானிட சரித்திரத்தை மட்டும் பிறர் சொல்லத் தெரிந்து கொண்ட நீர் எப்படித்துணிந்து புராணத்தில் வேறு யுகங்களில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் விஷயங்களை முற்றிலும் நம்பத்தகாதவை என்று உரைக்கின்றீர். காலம் ஒரு சிறு பாலம் என்று உமது எண்ணம் போலும். நம் பெரியோர்கள் காலத்தை ஒரு சக்ரமாக நிரூபிப்பது வழக்கம். அது மேலும் கீழும் சுழன்று கொண்டே இருக்கிறது. பூமி பலகைபோல் மட்டமானதென்றுசொல்பவரை நீர் எவ்விதம் எளனம் செய்கிறீர். இவ்விதம் காலத்தை ஒரு குறுகிய சட்டமாய் மதித்து இஞ்சு அளவால் அளந்துவிட்டு எல்லாம் தெரிந்துகொண்டேனென்று பேச நீர் இப்பொழுது பரிஹாஸத்திற்கு ஆளாகிறீரல்லவா? இந்த அனாதி காலத்தில் இன்று தான் இந்த மாயா யுத்தமும் ஆக்னேயம் முதலிய அஸ்திர பிரயோகங்களும். இவைகளை வர்ணித்த வால்மீகி வியாஸர் முதலியவர்கள் கர்ண பரம்பரையாகவாவது அவைகளைப்பற்றி கேட்டிருக்கவேண்டும். முன் எழுந்து அழிந்த நாகரீகங்கள் பல. அவைகளின் சில முக்யமான வரலாறுகளை நம் முன்னோர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள். எந்த ராக்ஷஸர்களிடம் இத்தகைய த்வம்ஸக்கருவிகள் இருந்தனவோ அவர்கள் பூண்டுடன் அழிந்து விட்டார்கள். அவர்கள் நாகரீகமும் அவர்களுடன் அழிந்தது. அவர்கள் பௌருஷத்தை முற்றிலும் நம்பி தெய்வக் கட்டளைகளை மீறினதால் மிஞ்சவில்லை. வீரமும் ஸாத்வீகமும் கூடினால் தான் வீரம் தன்னையே அழித்துக்கொள்ள காரணமாகாது. ஸாத்வீக குணமற்ற அரக்க ஜாதி ஆகையால் அழிந்துபோயிற்று. ஆனால் இவ்வித்தைகள் அவர்களிடம் மட்டும் அல்ல. மானிட ஜாதி க்ஷத்திரியர்களிடமும் பரவி இருந்தது. விச்வாமித்திர மகரிஷி ஸ்ரீ ராமனுக்கு உபதேசித்த அஸ்திரங்களை கவனித்துப்பாருங்கள். அக்னியை வர்ஷிக்கும் அஸ்திரம் ஒன்று, புயல் காற்றை உண்டு பண்ணும் அஸ்திரம் ஒன்று. தூங்கச்செய்யும் அஸ்திரம் ஒன்று, விஷப் பாம்புகளை உதிர்க்கும் அஸ்திரம் ஒன்று, இவ்வித அஸ்திரங்களில் ஜ்ரும்பகம் என்ற அஸ்திரம் செய்யும் வேலையை ஸ்ரீ பவபூதி மகாகவி வர்ணிக்கிறார்.

"காரிருளும் ஜ்வாலைகளின் வளையங்களும் சுழன்று சுழன்று வருவதைப் பார்த்தால் மேகங்களின் சூழ்ந்த மின்னல் ஒளியுடன் கூடிய மலை சிகரங்கள் புரண்டு வருவது போல் காணப்படுகிறது." பகவானின் லீலா மயமான இப்ரபஞ்ச ஸிருஷ்டியில் கிணற்றுத் தவளை போன்ற நாம் சமுத்திரம் எவ்வளவு பெரிதென்று விவாதம் செய்துகொண்டிருக்கிறோம். அனாதியான இந்த பிரபஞ்ச வர்த்தமானத்தை நம் குறுகியதும் தன் பெருமை பாராட்டுவதுமான அல்ப புத்தியால் எப்படி நிர்ணயிக்க முடியும். நாம் இன்று பொய்க்கதைகளை எழுதி பல்லாயிரம் வருஷங்களுக்கு பிறகு வரப்போகும் ஜன ஸமூகத்தை மோசம் செய்ய நினைக்கிறோமா? நம் முன்னோர்கள் நம்மைப் போல் கூட யோக்யர்களென்று சொல்ல முடியாதா? அப்பெரியோர்கள் தங்களுக்கு எது பிரத்யக்ஷமானதோ அல்லது செவியாரலானதோ அதைத் தான் எழுதியிருக்கிறார்கள். பூனாவில் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் விளங்கிய மகா பண்டிதர் ஸமஸ்கிருத சந்திரிகை பத்ராதிபர் ஸ்ரீ அப்பா சர்மா என்பவர் முன்னொரு காலத்தில் அச்சுயந்திரங்கள் இருந்ததாய் வேதம் முதலிய பிரமாணங்களிலிருந்து எடுத்து நிரூபணம் பண்ணி ஓர் வியாஸம் எழுதியிருக்கிறார். பூதலம் எப்படி பந்துபோல் உருண்ட உருவமுடையதோ அதுபோல் காலமும் சக்ர வடிவமானது. அது நேர் கோடென்று பி ஸி. எ டி. கணக்கு கற்றவர்கள் நினைக்கிறார்கள். அது வட்டமானதென்று நம்மவர் எப்பொழுதும் வழங்கி வருகிறார்கள்.

இதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது க்ஷத்ரிய பலம் ப்ரம்ம பலத்தை அதாவது ஸாத்வீக குணத்தை பொருட்படுத்தாமல் பெருகி பொங்குமாயின் தன்னுடையவும் பிறருடையவும் நாசத்திற்கு ஹேதுவாகும். இந்த ஸ்ரீ பகவத் லீலை அனாதியாய் நடந்து வருகிறது.

पारित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

விக்ரம-வூ ஆவணி-மீ 21உ

ஹிந்து மதத்தின் உயர்ந்த நோக்கம்.

கும்பகோணம் அத்வைத ஸபையின் 46 வது வருஷ ஸதஸ்ஸில் தலைமைவகித்த மஹாமஹோபாத்யாய வித்யாவாசஸ்பதி பிரம்ம ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் அச்சமயம் செய்த சிறந்த பிரஸங்கமானது, தத்கால நவீன நாகரிகவலையில் சிக்குண்டு ஹிந்து மதத்தின் பரந்த நோக்கங்களை அறியாமல் மனம் போனபடி பேசித்திரியும் சீர்திருத்தவாதிகளுடைய மதி மயக்கத்தைத் தெளிவிக்கும் மருந்து போலிருந்தது. ஆங்கிலத்திலும் வடமொழியிலும அதிதரஸாதாரணமான பாண்டித்யம் பெற்று உலக அநுபவத்தில் ஊறியுள்ள அந்த வித்யா வாசஸ்பதியின் மிகுந்த அழுத்தமான அபிப்பிராயங்களை யார்தான் மறுத்துப்பதில் கூறவல்லவர்? நேற்று உபந்யாஸத்தில் அவர் கூறிய ஒவ்வொன்றும் அபூர்வ விஷயம் நிறம்பிய ஆராய்ச்சியுடனிந்த போதிலும், முக்யமாக அவர் வெளியிட்ட இரண்டொரு அம்சங்களையாவது இங்கு பிரஸ்தாபிக்கவேண்டியது அவச்யமாகிறது.

தற்காலம் அர்த்த மற்ற தேசாபிமான வேஷம் பூண்ட பலர் ஹிந்து மதத்தின் மீது ஆதார மற்ற பல பழிகளைத் தங்கள் குதர்க்க புத்தியால் கற்பித்துக் கொண்டு மதத்தை ஒழிக்கப் பாடுபடுவதைப் பார்க்கிறோம். மேலும் சிலர் பாபம், புண்யம், பரலோகம் கடவுள் என்ற வேதாந்த போதனைகளால் நம்மவர்கள் உலக ஸம்பவங்களில் அச்ரத்தை கொள்ளும்படி செய்விக்கப்பட்டு பௌருஷ மற்றவர்களாகி விட்டதாயும் புகார் கூறப்படுகிறது. இவ்விரண்டு துர்வாதமும் உண்மையான மத அறிவு இல்லாததால் ஏற்பட்டதென்பதை ஸ்ரீசாஸ்திரியார் அழகாக எடுத்து விளக்கினார்.

தங்கள் மதங்களைப் பரவச்செய்ய மற்ற மதஸ்தர்கள் கையாண்ட குரூர முறைகளைச் சரித்திர ஆதார மூலமாக ஆராய்ந்தவர்களுக்கு ஹிந்து மதத்தின் உயர்ந்த போக்கு நன்கு புலப்படக்கூடியதே. கிருஸ்தவர்கள் ஒருகாலத்தில் ஏசு, கிறிஸ்துவையும், பைபிளையும் நம்பும்படி ஜனங்களை நிர்ப்பந்தித்தார்கள். அதை நம்ப மறுத்தவர்களைத் தீயிலிட்டதாகக்கூட அவர்கள் சரித்திரத்திலிருந்து அறியக்கிடக்கிறது. ஸேனுபலங்களை கொண்டு பிறதேசங்களை ஆக்ரமித்து அங்கு தங்கள் மதங்களைப் பரவச்செய்தார்கள். மஹம்மதியர்களும் ஒரு கையில் கத்தியும். மற்றொரு கையில் குரானும் ஏந்தி மத பிரசார நிர்ப்பந்தம் செய்ததாகச் சொல்லப்படுவதைக் கேட்டிருக்கிறோம். தவிரவும் மற்ற மதஸ்தர்கள் தங்கள் தேசங்களில் இதரமதஸ்தர்களின் உரிமைகளையும், நோக்கங்களையும் மதியாமல் அவர்களை விரட்டுவதையே ஒரு முக்ய கார்யமாகக் கொண்டிருக்கின்றனர்.

ஹிந்து மதத்தின் போக்கோவென்றால் மேற்கண்ட அநீதிகளுக்கு இடங்கொடுக்காதது. அது புஷ்பக விமானம் போல் எல்லா வகையினருக்கும் ஆதரவுடன் இடமளிப்பதாக அமைந்திருக்கிறதென்று ஸ்ரீ சாஸ்திரியார் குறிப்பிட்டார். கீதையில் ஸ்ரீ பகவானே வைதிக ஹிந்து மதத்தின் பெருந்தன்மையை விளக்கியிருக்கிறார். கிறிஸ்தவர்களோ, மஹம்மதியர்களோ, மற்ற மதத்தினரோ, ஏசுவையும், அல்லாவையும், மற்றதையும் நம்பாதவர்களுக்கு நற்கதிகிடையாதென்கிறார்கள். ஸ்ரீ கீதையில் பகவான் எல்லோரும் தம்மையே தெய்வமாக கொண்டாடும்படி கேட்கவில்லை. எவரெவருக்கு எந்தெந்த தெய்வமூர்த்தியில் நம்பிக்கையுளதோ அதையே அவர்கள் உபாஸிக்கலாமென்று சொல்லுகிறார். மேலும் எல்லோரும் ஒரேவிதமான கர்மாவையே செய்யவேணுமென்றும் அவர் நிர்பபந்திக்கவில்லை. அவரவருடைய ஜாதி, குலதர்மங்களின்படி ஸ்வகர்மாவினால் கடவுளை ஆராதித்தல் போதுமென்றும் பகவான் சொல்லுகிறார்! இவ்வளவு உயர்ந்ததும் விசாலமுமானநோக்கம் கொண்ட உபதேசம் ஹிந்து மதத்திலன்றி வேறு எந்த மதத்திலாவது காணக்கூடியதா?

ஹிந்துமத பிரமாண க்ரந்தங்களாகிய, சுருதி, ஸ்மிருதி, புராணதிகளோ, பின்னால் சாஸ்திரம் எழுதிய மஹான்களோ இதர மதத்தின் உயரிய அம்சங்களை அங்கீகரிப்பவர்களாகவே இருக்கிறார்கள். இந்த விசால நோக்கமிருப்பதால் தான் பார்த தேசத்தின் ஸொந்தக்காரர்களாயிருந்தாலும் கூட ஹிந்துக்களும், சுதேச அரசர்களும் நம் தேசத்தில் எல்லா அவைதீக மதத்தினரும் வாழும்படி ஸௌகர்யம் செய்து கொடுத்திருக்கிறார்கள். தசரதர் ஆட்சிக்குள்பட்டு அனேக மிலேச்சர்கள் இருந்ததாக ஸ்ரீ ராமாயணம் கூறுகிறது ஆகவே ஹிந்து மதம் ஒன்று தான், உலகத்தில் சாந்தியையும், அமைதியையுமே முக்ய நோக்கமாகக்கொண்டு அமைந்த மதமென்று நாம் பெருமை கொள்ளத் தடையில்லையென்று ஸ்ரீசாஸ்திரியார் விளக்கினார்.

உபநிஷத்தின் தத்வமாக வெளிப்பட்ட அத்வைதாதி வைதிக மதங்களும், த்வேஷத்தையும், பேதத்தையும் அடிப்படையாகக் கொள்ளாமல் ஸர்வ மத ஸாமரஸ்யத்தையும், சிறிய புழு முதல் சர்வ பூத ஹிதத்தையுமே முக்ய நோக்கமாகக்கொண்டு பிரவிருத்தித்திருப்பதையும் ஸ்ரீ சாஸ்திரிகள் அழுத்தமாகக் குறிப்பிட்டார்கள்.

வேதாந்தாதி மத உபதேசங்களால் நம்மவர்கள் இஹலோக நன்மைகளில் பற்றற்றவர்களாகி வாய் வேதாந்தம் பேசிக்காலம் கழிப்பவர்களாக ஆகிவிட்டார்களென்ற அபத்தக்கூற்றையும் ஸ்ரீ சாஸ்திரிகள் பலமாக மறுத்தார்கள். நமது வேதாந்தாதி சாஸ்திரங்கள் யாவற்றும் இஹலோக நன்மைகளுக்குப்பெரிதும் முக்யத்வம் கொடுத்திருப்பதை ஒவ்வொன்றிலும் காணலாமென்று ஸ்ரீசாஸ்திரிகள் வற்புறுத்தினார்கள்

புலியும், பசுவும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்கும் சாந்த மனோபாவம் ஹிந்து மதத்தின் அடிப்படையென்பதை ஸ்ரீ சாஸ்திரிகள் வற்புறுத்தியதற்கு நேற்று சபையிலேயே சிறந்த உதாஹரணத்தைப் பலர் கண்டிருப்பார்கள். அங்கு கூடியிருந்த வைதிக சிரேஷ்டர்களின், ஆசார அனுஷ்டானதிகளுக்கும் மத நம்பிக்கைகளுக்கும் முற்றிலும் மாறான போக்குள்ளவரைக்கூட அங்குள்ளவர்கள் மதித்து அமைதியாக நடந்துகொண்டது யாவராலும் விசேஷமாக கவனிக்கக்கூடியதாயிருந்தது. தங்களைத்தவிர வேறு யாரும் வாழக்கூடாதென்ற அல்பத்தமான மனோபாவம் மதத்தில் மட்டுமன்றி ராஜியக்கக்ஷிகளில்கூடத் தாண்டவமாடுவதைப் பார்க்கிறோம். மற்றக் கக்ஷியாரை ஹிம்ஸிக்கவும், அழிக்கவுமே ஒவ்வொரு கக்ஷியாரும் திட்டமும் பிரசாரமும் போடுகிறார்கள். இத்தகைய அல்ப நோக்கமுள்ளவர்கள்கூட ஹிந்து மதத்தின் உயர்ந்த நோக்கங்களைப்பற்றி அபத்தம் பேசினால் இதை யார்தான் ஸஹிப்பார்கள்? அவர்கள் ஸ்ரீ சாஸ்திரியாரின் அரும் பெரும் உபதேசங்களை கவனிப்பார்களா?

தக்ஷிணாயந பிரதம விவாஹ சர்ச்சை.

ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் தீர்ப்புக்கு விடப்பட்டது.

கும்பகோணத்தில் நடந்த அத்வைத ஸபையில் ஞாயிற்றுக்கிழமை காலையில் மேற்படி விஷயத்தை யோஜிக்க ஸபா பண்டிதர்கள் கூடினார்கள். ஸபாதிகாரிகளைத் தவிர, சென்னை அட்வகேட், தர்ம ரக்ஷாமணி ஸ்ரீமான் கே. பாலஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள், திவான்பஹதூர் கே. எஸ் ராமசாமி சாஸ்திரிகள் முதலிய வேறு பல பிரமுகர்களும் அச்சமயம் விஜயமாயிருந்தார்கள். சென்ற வருஷம் அத்வைத ஸபையால் நியமிக்கப்பட்ட ஸப் கமிட்டியார் தக்ஷிணாயந பிரதம விவாஹத்தைப்பற்றித் தயாரித்து வெளியிட்டிருக்கும் நிர்ணயத்தைப்பற்றி பேச்சு ஆரம்பித்தது. இந்த விஷயத்தைப் பற்றி பண்டிதர்களுள் அபிப்பிராய பேதம் பலமாய் இருப்பதாக வெளிப்பட்டது.

கார்யதர்சியின் வேண்டுகோளின்பேரில் பேசிய, அக்கினி ஹோத்ரம், ஸ்ரீ தாதாசாரியார் ஏற்கனவே பல வருஷங்களுக்குமுன் இவ்வூர் ராமஸ்வாமி கோவிலில் நடந்த திரிமதஸ்தர்கள் கூடிய வித்வத ஸபையில், தக்ஷிணாயன பிரதம விவாஹத்தை எல்லா பண்டிதர்களும் ஆக்ஷேபித்ததாயும், மஹாமஹோபாத்ய பங்காநாடு ஸ்ரீகணபதி சாஸ்திரிகளுள்பட பல வித்வான்கள் அப்போது அங்கு இருந்ததாகவும், பெருக வாழ்ந்தான். ஸ்ரீ ரங்கசாரியர் ஸ்வாமிகள் மட்டும் அதை ஆதரித்ததாயும், ஸுதர்சன பாஷ்யத்தின் போக்கை ஆதரிக்க முடியாதிருப்பதாயும் எடுத்துச்சொன்னார்.

பிரம்மஸ்ரீ போகலம் ஸுந்தரேச சாஸ்திரிகள் பேசுகையில் தாம் ஜகத்குரு ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளைப் போய் தரிசனம் செய்துகொண்டு வந்ததாயும், இந்த விவாஹ விஷயமான சர்ச்சையை அத்வைத ஸபை முடிவு செய்ய வேண்டாமென்றும், இரு தரப்பு கக்ஷிகளையும் ஸன்னிதானத்திற்கு அனுப்பிவிட்டால் ஸ்ரீ ஸ்வாமிகளே அதில் தங்களது தீர்ப்பை வெளியிடுவதாக ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதன்மேல் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் தீர்ப்புக்கு இதை அனுப்பிவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. மத்யஸ்தர்கள் எழுதிய நிர்ணயத்தை ஸபையில் வாசிக்க மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டது.

(ந. கி.)

கும்பகோணம் அத்வைத ஸபை.

46வது வருஷத்திய ஸதஸ் பூர்த்தி.

ஏற்கனவே நமது பத்திரிகையில் அறிவித்திருந்தபடி கும்பகோணம் அத்வைத ஸபையின் 46 வது வருஷத்திய ஸதஸ்ஸானது சென்ற ஒரு வாரமாக ஸ்ரீ மடத்தில் நடந்து செவ்வாய்க்கிழமை காலையில் வித்வத் சம்பாவனையுடன் பூர்த்தியாகியது. வழக்கம் போல் அத்வைத விஷயத்தைப்பற்றியும், பொது தர்ம விஷயத்தைப்பற்றியும் பிரபல வித்வான்கள் ஒவ்வொரு தினத்திலும் பிரஸங்கம் செய்தார்கள். வாக்யார்த்தங்கள், வாசிக லேகன பரீக்ஷைகள் முதலியவைகளும் வழக்கப்படி நடந்தன.

ஸெப்டம்பர்மீ 3வ காலை வித்வத் ஸம்பாவனையை முன்னிட்டு 8 மணிக்கு ஸ்ரீ மடத்தில் ஸதஸ் கூடியது. ஸபைக்கு வந்திருந்த வெளியூர், உள்ளூர் வித்வான்கள் தவிர, மஹாமஹோபாத்யாய, வித்யா வாசஸ்பதி, குலபதி, ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள், ரைட் ஆனரபிள், வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள், ஸ்ரீமான்கள் ஏ. ஸுப்ரமண்ய அய்யர், ஸ்ரீ கே. ஆர். ரெகுநாத ராவ், டி. எல். ஸுப்பய்யர், டி. கே. வெங்கட்டராமய்யர், குன்னம் ஸுப்ரமண்ய அய்யர், முடிகொண்டான் எம். ராமய்யர், ஏ. எஸ். கல்யாணஸுந்தர சாஸ்திரிகள், திருப்பதி காலேஜ் பிரின்ஸ்பால் ஸ்ரீ சின்னசாமி சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ், வித்வத்கவி, ஆர். வி. கிருஷ்ணமாசாரியர், அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர், மாஜி ப்ரொபஸர், எம். ஆர். ராஜகோபால அய்யங்கார், காலேஜ் தமிழ் பண்டிதர் ஸ்ரீ சடகோபராமானுஜாசாரியர், டவுன் ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர், ஊ. சா. வெங்கடராமய்யர், ஸ்ரீ நடேசசர்மா, எஸ். மஹாலிங்கய்யர், ஜி. வி. வெங்கடராம அய்யர் முதலிய வேறு பலரும் வந்திருந்தனர்.

சாந்தி பாடம் நடந்த பின், அத்வைத ஸபா கார்யதர்சி ஸ்ரீமான் எம். கே. வைத்யநாத அய்யர் அவர்கள், மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரியார் அவர்களை ஸதஸ்ஸில் அக்ராஸனம் வஹித்து ஸம்பாவனைகளை வழங்கும்படி கேட்டுக்கொண்டு ஸ்ரீ சாஸ்திரியாருடைய பாண்டித்யம் முதலானவைகளை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். ஸ்ரீ அய்யு அய்யரும் அவரது தர்ம பத்னியும், குமாரத்தி ஸௌபாக்யவதி சிவகாமி அம்மாளும் அத்வைத வித்யை வளர்ச்சிக்குச் செய்த பேருபகாரத்தை குறிப்பிட்டு அந்த மூவரும் அடங்கிய படத்தை திறந்துவைக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஸ்ரீமான் வைத்தினதைய்யர் அவர்கள் பேசுகையில் சென்றவருஷம் ஜகத்குரு ஸ்ரீ ஆசாரியஸ்வாமிகள் நேரில் இருந்து செய்த அநுக்ரஹ பூர்வகமான உதவிகளுக்கு ஸபையின் வந்தனத்தைத் தெரிவிப்பதாயும் இவ்வருஷம் ஸ்ரீ ஸ்வாமிகளின் நியமனப்படி கும்பகோணத்திலும் அதைச் சுற்றி 5,6 மைல்களுக்குள்பட்ட ஒவ்வொரு அக்கிரஹாரத்திலும், அத்வைதஸபை நடக்கும் விளம்பரத்தை பிரசுரிக்கப்பட்டிருப்பதாயும் கூறினார். ம. ம. கருங்குளம், ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் ம. ம ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் இவர்களுடைய வியோகத்தினால் ஸபைக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் குறிப்பிட்டார்.

போகலம் பிரம்மஸ்ரீ ராம சாஸ்திரிகள் பரீக்ஷாதிகாரிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டிருப்பதாயும், இவ்வருஷம் தர்மக்ஞ பட்ட பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிய கல்லிடக்குறிச்சி ஸ்ரீ காசி தீக்ஷிதரைப் பாராட்டுவதாயும், ஸபையின் திரவிய சக்தி விருத்தியாவதற்கு ஆஸ்திக தனிகர்கள் உதவிபுரிய வேணுமென்றும் ஸ்ரீமான் கே. எஸ். வெங்கடரமணி போன்ற சில ஆஸ்திகர்கள் ஸபைக்கு பூமிதானம் செய்ய முன்வந்திருப்பதாயும், திருக்கருகாவூர் ஸ்ரீ சுப்பயரவர்கள் 500 ரூபா கொடுத்து ஸபையின் போஷகராகச் சேர்ந்திருப்பதைப் பாராட்டியும், ஸ்ரீ எஸ் மஹாலிங்கய்யரவர்கள் சாச்வத மெம்பராகப் பதிவு செய்து கொண்டிருப்பதை மெச்சியும், ஸபாவித்வான்கள் தவிர இதர வித்வான்களும், உள்ளூர், வெளியூர், லௌகிக பிரமுகர்களும் முக்யமாக கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும் வந்திருப்பதில் தமது திருப்தியைத் தெரிவித்தும் பேசி முடித்தார்.

பிறகு மஹாமஹோபாத்யாய ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அக்ராஸனம் வஹித்து ஸ்ரீ அய்யுவய்யர் படத்தைத் திறந்துவைத்து அத்வைத வித்யை விருத்தியாவதற்கு அவருடைய குடும்பத்தார் செய்துள்ள மஹத்தான கைங்கர்யத்தை வெகுவாகப் பாராட்டினார்.

பிறகு அவர்கள், அத்வைத மதத்தின் உயர்வு, அதிலுள்ள ஸமரஸ பாவம், அதன் உயர்ந்த நோக்கம் முதலியவைகளைப்பற்றி விரிவாகப்பேசினார்கள். வேதாந்த விசாரத்தினால், அதிலும் அத்வைத போதனையால் நம்மவர்களை பிற்போக்கர்களாகவும், உலக வாழ்க்கையில் பற்றற்றவர்களாயும் நம்முன்னோர்கள் செய்து தேசத்தைப் பாழாக்கிவிட்டதாகச் சில [illegible] மாகக் கூறுவதை ஸ்ரீ சாஸ்திரியார் கண்டித்து, நமது வேதாந்த தத்வங்களில் இஹலோக வாழ்க்கை ரஸமும் வெகுவாக அடங்கியிருக்கிறதென்பதை நிரூபணம் செய்தார். பகவான் ஸ்ரீ சங்கரரே, ஸ்ரீ ஆதி பகவத் பாதாள் ரூபமாக அவதரித்தார் என்பதை தக்க நியாயங்களுடன் உபபாதனம் செய்து இந்த ஸபையை வெகு சிரத்தையுடன் நன்கு நடத்தி வருகிறவர்களுக்கும் அதற்கு உதவி செய்து வருகிறவர்களுக்கும் பகவான் ஸர்வ மங்களங்களையும் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்திப்பதாயும் சொல்லி பிரஸங்கத்தை முடித்தார்கள்.

பிறகு ஸ்ரீமான் டி. எல். ஸுப்பய்யரவர்கள் தலைவரின் உபன்யாஸ உபதேசமொழிகளைப்பாராட்டி, இம்மஹா வித்வான் சிரஞ்சீவியாக இருந்து இந்த ஸபைக்கு பேருதவி புரிந்து வரும்படி அனைவரும் பகவானிடம் பிரார்த்திப்பதாகக் கூறினார்.

பிறகு அக்ராஸனாதிபதியால் வழக்கப்படி வித்வத் ஸம்பாவனைகள் செய்யப்பட்டன.

ஸ்ரீமான் டி. எல். ஸுப்பய்யரவர்கள் அங்கு வந்திருந்த ஆஹிதாக்னிகளுக்கு தனியாக 2 ரூபாய் விதம் ஸம்பாவனையை வழக்கப்படி அளித்தார்.

“தர்மஜ்ஞ” பரீக்ஷையில் தேறிய கல்லிடைக் குறிச்சி ஸ்ரீமான் காசி தீக்ஷிதருக்கு ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸம்பாவனை ரூ. 150 குன்னம் ஸ்ரீ ஸுப்ரமண்ய அய்யரால் கொடுக்கப்பட்டது.

ஸம்பாவனைகள் முடிந்த பிறகு கார்யதர்சி ஸ்ரீமான் வைத்யநாதய்யரால் யாவருக்கும் வந்தனோபசாரம் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீ மடம் ஸர்வாதிகாரி ஸ்ரீமான் குப்புஸாமி அய்யரவர்களும், மானேஜர் ஸ்ரீமான் விச்வநாதய்யரவர்களும் போஜனாதி ஸகல ஸௌகர்யங்களையும வெகு சிரத்தையாக கவனித்துக் கொடுத்தற்கு நன்றி பாராட்டினார்.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

நேராகவே சீர்திருத்த ப்ரசாரம்!! படக்காக்ஷிகளில் முன்னர் அவ்யவஸ்தா விஷய ப்ரசாரம் நடைபெற்றது. இப்போது நேர்முகமாகவே விதவா விவாஹம் ருது மதி விவாஹம் முதலியவை படக்காக்ஷி மூலம் ப்ரசாரம் செய்யப்படுகிறது. காதல் விவாஹத்தால் வருந் தீமைகளைப் படமெடுத்தால் மிக மிக ருசியாயிருக்கும்? யார் செய்வார்?

ஓர் சிறந்த முறை! சென்னையில் ப்ரதி ஞாயிறும் காலை மாலைகளில் நம்து பெண்கள் கிருஸ்தவ பாடசாலை சென்று ஸ்துதி செய்வதைத் தடுக்க ஓர் கலாசாலைத் தலைவர் நமது மத கதைகளைக் கூறி ஸ்துதி பாடங் கற்பிக்க ஏற்பாடு செய்திருப்பது மிகவும் அவச்யமான சிறந்த மார்க்கமாம். மற்ற கலாசாலைகள் இதைப் பின்பற்றுமா?

பால பாகவதமும் ஸ்துதியும்!! முத்யால் பேட்டை கச்சாலேச்வரர் எலிமெண்டரி கலாசாலையில் ஞாயறன்று மாலை 4 மணிக்கு ஸ்ரீ வத்ஸ ஸோம தேவ சர்மா கண்ணன் யார்? ஏன் பிறந்தார் என இவர்களுக்கேற்றபடி உபன்யஸித்தார் பெற்றோர்களும் குழுமி இருந்தனர். அவர் வெளியிட்ட ஸ்துதி குஸுமாஞ்ஜலி யிலிருந்து. “வேதோத்தார விசாரமதே” என்ற ஸ்துதி பாராயணம் செய்யப் பட்டது.

கிருஷ்ணஷ்டமி உத்ஸவம்! பல ஸங்கீத ஸபைகள் ஷ்டி வியாஜமாகக் கொண்டு பலரிடமிருந்து பணத்தைப் பரித்து கொஞ்சம் பாடகருக் களித்து தன் வயிற்றை நிறப்புவது வழக்கம். இவ்வாண்டு சென்னையில் அவ்வளவு மும்மரமில்லை. என்னகாரணம் ரேடியோவா? தாரிதரியமா?

தார்மிக உத்ஸவம்! கோபாலபுரம் ஹிந்து மத ஸபை 10 தினங்கள் பகவதாராதனத்துடன் பண்டித உபன்யாஸத்தை நடத்துகிறது. ஒவ்வொரு வித்வான் ஒவ்வொரு தினமாக வந்து அழகாக உபன்யஸிக்கின்றனர்

விநாயகோஸ்தவம் தஞ்சை ஓம் கணபதி பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாநந்த பவநத்தில் மிக சிறப்பாக அவ்வுஸ்தவத்தை நடத்த ஆரம்பித்திருக்கின்றனர். மாம்பலம் விநாயகர் ஆலயத்தில் 21 நாள் உத்ஸவ உபன்யாஸங்கள் நடக்கின்றன.

ஸ்ரீ ராமபட்டாபிஷேகம்.

கும்பகோணம் மேலய்யந்தெரு ரிடயர்ட் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ ஏ. வைத்யநாதய்யர் கிருஹத்தில் 6 மாதகாலமாக மன்னார்குடி வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகளால் நடத்தப்பட்டுவந்த ஸ்ரீராமாயண பிரவசனத்தில் ஆவணிமீ 14வ யன்று ஸ்ரீ ராமபட்டாபிஷேகம் வெகு சிறப்பாக நடந்தது. விவரம் அடுத்த ஸஞ்சிகையில்.

ஸபையை நன்கு நிர்வஹித்து வரும் கமிட்டியாருடைய சிரத்தையும், முக்யமாக கார்யதர்சி ஸ்ரீமான் எம். கே. வைத்யநாத அய்யருடையவும் சலியாத உழைப்பையும் சிரத்தையையும் யாவரும் மனமாற மகிழ்ந்து கொண்டாடினார்கள். ஸதஸ்ஸானது பகல் 12 மணிக்கு பூர்த்தியாகியது. (ந-கி)

வைஸ்ராய் அரசியல் அறிக்கை.

சிறுபான்மையோரைப் பற்றிய பிரச்னே

ஸநாதனிகளின் நிலே மாறவில்லை

(ராவ்சாகேப் ஸ்ரீ நடேசய்யர்)

ஆவலுடன் எதிர்பார்த்த வைஸ்ராய் அறிக்கை கடைசியில் ஒருவாருக வெளிவந்து விட்டது. அறிக்கையின் வாசகம், நீதி, பலன் முதலியவைகளைப் பற்றி, அபிப்பிராயங்கள் பல சொல்லப்பட்டன. வழக்கப்படியான அபிப்பிராய பேதங்களும் காணப்பட்டன. அநேகர்கள் வைஸ்ராயால் ஏற்கனவேயே சொல்லப்பட்டவைகளில் உள்ளதை இனிமையான சமாதான வாசகத்தில் காண்கிருர்கள். காங்கிரஸின் நோக்கங்களையும், உரிமைகளையும் அறவே மறுத்திருப்பதை பூடகமாய் அறிக்கையில் தெரிகிறது. இந்தியாவின் அடிமைத் தனத்தை நீடிப்பதற்கான ஒரு ஸூசகமும் இருக்கிறது. இந்திய ராஜ்ய, சமூக, மதசிறுபான்மையோரின் உரிமைகளில் தங்களுக்குள்ள ஒரு நியாயமான கடமையும், பொருப்பின் பேரிலும், இந்தியாவிற்கு சீக்கிரத்திலேயே சுயேச்சை கொடுப்பதற்கான நல்லெண்ணங்களை மற்றும் பலர் நம்புகிருர்கள். வெகு காலமாக காத்துக்கொண்டும், தவம் கிடந்துகொண்டிருக்கும் காங்கிரஸ் மாஜி மந்திரிகள், ஒரு சமயம் நாட்டின் நன்மையை கவனிக்கவில்லையென்றும், மூடபிடிவாதம் என்றும் ஜனங்கள் பழி சுமத்தலாமென்பதற்கு அஞ்சி, தாங்கள் ஆட்சியை நடத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமென்று ஆவலுடன் எதிர்பார்க்கிருர்கள் என்று நினைக்க போதுமான அத்தாட்சிகள் இருக்கின்றன. அதனுடைய குணகுணங்களைப் பற்றி நாம் ஆராய வேண்டாம். ஸநாதனிகள் தங்களைப் பாதிக்கும் அறிக்கையின் ஒரு அம்சத்தைப் பற்றித் தான் கவலைப்படுகிருர்கள்.

வைஸ்ராயின் அறிக்கையில் மத, அரசியல் சிறுபான்மையோரைப்பற்றிய ஒரு குறிப்பு இருக்கிறது. அரசியல் மாறுதல்களில் சிறுபான்மையோரைப் பற்றியவரை, அவர்களுடைய நிலையையும், கோரிக்கைகளையும், கண்காணிப்பதிலும், பாதுகாப்பதிலும் மிகுந்த அக்கரையைக் காட்டுகிறது.

அதனுல் சென்ற ஐந்து வருஷங்களாக அமுலிலிருந்து வரும் 1935-ஆம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தை, இதுவரை ஏற்பட்ட அனுபவங்களின் பேரில் மாற்றி அமைக்கும்படியான ஒரு கடமையுள்ளவர்களாக நமது அரசாங்கத்தார் ஆகிருர்கள். தவிரவும் அதனுடைய நோக்கமும், விலாசமும், திருத்தப்படும். கடந்த 27 மாதங்களாக மத சமூக விஷயங்களில், தங்களுடைய அதிகாரத்தை தாங்களே நிர்ணயம் செய்துகொண்டு, அவ்வதிகாரத்தை அக்கிரமமாக உபயோகித்ததால், மேற்கண்ட அரசியல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு ஒரு அத்தியாவசியமான காரணமாயிருக்கிறது. விவசாயிகளின் கடன் நிவாரண சட்டமானது, விவசாயிகளுக்கு நன்மையை விட தீமையையே அதிகம் செய்திருக்கிறதென்று சென்னை ஹைகோர்ட்டின் ஒருசிறந்த நியாயாதிபதி சொல்லியிருக்கிருர். மதுவிலக்கு கொள்கையானது அதனுல் பாதிக்கப்பட்டவர்களை திருடர்களாகவும், சோரத்தனமாகக்கள்ளிறக்கிறவர்களாயும், செய்தது அதுவும் பம்பாய் ஹைகோர்ட் நீதிபதிகளால் கண்டிக்கப்பட்டது.

அவர்களுடைய மேன்மேலும் வரிவிதிக்கும் கொள்கையானது, தாங்கமுடியாத வரிப்பளுவை குறைக்கும் மிக்க தேவையான சீர்திருத்தத்தை படுகுழியில் தள்ளிற்று.

கோவிலைப்பற்றியும், பிராசீன பிரார்த்தனை முறையைப்பற்றியுமான அவர்களுடைய கொள்கையை வெட்ட வெளிச்சமாக்கினல் போதுமானது

ஆயுஸ்பூராவும் வழக்கமாக சட்டவிரோதமான அட்டூழியங்கள் செய்தும், கண்டுபிடிக்கப்படாமலும், தண்டனையடையப்படாமலும் இருக்கும் ஒரு குற்றவாளியின் நெஞ்சழுத்தத்தோடும், ஹிட்லர், முஸோலினி: லெனின் முதலியவர்களுடைய மிருகத்தன்மையோடும், நமது சென்னை மாஜி காங்கிரஸ் மந்திரிகள், பல அகில இந்திய சிறப்பு வாய்ந்த கோவில்களுடைய சான்னித்ய குறைவிற்கும், அசுத்தத்துக்கும். அதனுல் 25 கோடி சனதனிகளின் துக்கத்துக்கும், பாத்திரர்களானுர்கள். பிறகு தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக 1939 இந்திய முதல் அவசரச்சட்டத்தை யு/, 22 நிர் சட்டத்தையும் உண்டாக்கினுர்கள். ஷெ சட்டத்திலுள்ளவைகளை செய்வதற்கான அதிகாரங்கள் தங்களுக்கு நியாயமாக இருக்கிறது என்று அவர்கள் நம்பவில்லை. அவர்கள் தங்கள் செய்கையை ஸ்தாபிப்பதற்கு மிகவும் பாடுபட்டார்கள் என்பது பகிரங்கம். மாகாண சட்ட சபையைக்கொண்டு, அரசியல் நோக்கங்களை சாதிப்பதற்கு தப்பான வழிகளை கையாளுவதற்கு இதைவிட வேறு உதாரணம் அவசியமில்லை,

ஆகையால் தங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தை இஷ்டப்படி தப்பாக உபயோகித்தால், மறுபடியும் அப்படி நேராமலிருப்பதாக, அதிகார துஷ்பிரயோகங்களின் எதிராக சரியான பாதுகாப்புக்கள் அளிக்காவிடில், மாகாண சட்ட ஸபைகளுக்கு அம்மாதிரியான அதிகாரங்களை கொடுக்கக் கூடாது.

ஸநாதனிகள், பாக்கி எல்லாவற்றைக் காட்டிலும், மதத்தைத்தான் சிறப்பாக கொண்டாடுகிருர்கள். அரசியல், பொருளாதார சுயேச்சைகளைவிட மத சுயேச்சையையே பெரிதும் விரும்புகிருர்கள். மே. த. வைஸ்ராய் காங்கிரஸ், முஸ்லீம்லீக் ஹிந்து சபைதலைவர்களோடு கலந்து பேசுகிருர் ஆனல் இதுவரை ஒரு சநாதன பிரதிநிதியாவது அழைக்கப்பட்டு கலந்துகொள்ளப்படவில்லை. சனதனிகள் சொல்லும்படி அவர்களுடைய எண்ணிக்கையானது 25 கோடியாக இருந்தால் அவர்களை அழையாமலிருப்பது ஒரு நியாயமுமில்லை. அப்படி இல்லாமல் அவர்கள் சிறுபான்மையோராக இருந்தால் வைஸராய் அறிக்கைப்படி அவர்களுடன் கலந்துகொண்டு அவர்களுக்கு பாதுகாப்புக்கள் அளிப்பது இன்னும் அத்தியாவசியமாகிறது. சனதன தலைவர்களுடைய கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, அவர்களுடைய பிரதிநிதிகளை கலந்து கொள்வது மிகவும் நியாயமாகும். காலஹரணம் செய்து நியாயம் வழங்குவது நியாயத்தை மறுப்பதாகும்.

வாலி வதம்

(கும்பகோணம் M. ராம ராவ் பி. ஏ.)

வாலி ஸ்ரீ ராகவனிடம் தோஷம் கிடையாதென்று ஒப்புக்கொண்டு விட்டபோதிலும் நமது ஆராய்ச்சியாளர்கள் மட்டும் ஒப்புக் கொள்வதில்லை. இம்மாதிரியே ஸ்ரீ ராமாயணத்தின் ப்ராசீன வியாக்யான கர்த்தர்கள் சந்தேகத்திற்கே இடமில்லாமல் நிர்ணயித்த விஷயங்களுக்கு மாருன நீதியில் ஆராய்ச்சி செய்து வருகிருர்கள். ஆகவே நானும் இரண்டொரு விஷயங்களைச் சொல் வேண்டியிருக்கிறது.

இராமாயணத்தின் ஓர் விஷயத்தை அதிலுள்ள வாக்கியங்களினலேயே நிர்ணயிக்க வேண்டுமென்ற குலதர்மம் கிடையாது. "இதிஹாஸ புராணுப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்'' என்றபடி வேறு கிரந்தங்களின் உதவியைக் கொண்டும்நிர்ணயிப்பது மேலானது. அப்போதுதான் மற்றொரு பிரமாணத்தின் ஸம்வாதம் ஏற்படுவதுடன் நிர்ணயமும் உறுதிப்படும். மேலும் அங்குள்ள வார்த்தைகளையே எடுத்துக்கொண்டாலும் அவ்வார்த்தைகளின் அர்த்தத்தில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் என்னசெய்வது? உதாஹரணமாக 'பராங்முக' என்ற பதத்திற்கு ஒருவர் "மறைந்து நின்று'' என்றும் மற்றொருவர் "எதிரிலிருக்கும் உண்மையறியாத'' என்றும் அர்த்தம் செய்கிருர். இவ்வர்த்தங்களையும் ராமாயண வாக்கியத்தாலேயே நிர்ணயிக்கவேண்டி வருமே! ஆகவே நாம் வேறு பிரமாணங்களையும் கையாள வேண்டியது அவசியம். மூன்று மதாசாரியார்களுக்கிடையே இராமாயணத்துக்கு அரிய சேவை புரிந்தவர் ஸ்ரீ மத்வர் ஒருவர் தான் என்று கூறவேண்டியிருக்கிறது. அவர் பல கிரந்தங்களிலுள்ள விஷயங்களையும் பல கல்பங்களில் நடந்த நிகழ்ச்சிகளையும் ஆதாரமாகக்கொண்டு இராமாயணக்கதையை எழு அத்தியாயங்களில் சுருக்கி எழுதி பல தத்வங்களையும் வெளியிட்டிருக்கிருர். பல கிரந்தங்களில் கூறப்பட்டதை அனுஸரித்தே நிர்ணயிக்கவேண்டிய அவசியமானதால் ஸ்ரீராமர் வாலியை அத்ருச்யராகவே அதாவது வாலியின் கண்ணிற்படாமலேயே கொன்ருர் என்பது தெளிவு.

முதலாவதாக வாலியை ஏன் கொல்ல வேண்டும் என்ருல் அவனுடைய பல குற்றங்களைத் தவிர பின் வருவதும் காரணம். (ஸ்காந்தம்) வாலியின் ஸகாவான ராவணனும் ராமரைச் சரணமடைந்திருப்பான். ராவண வதம் ஏற்படாது. ராவண வதம் இல்லாவிட்டால் அவதார பயனில்லாமற் போகும்.

"விஷ்ணோ ஸஹாயான் பலின: ஸ்ருஜத்வம் காமரூபிண'' என்று விஷ்ணுசகாயத்தின் பொருட்டு சிருஷ்டிக்கப்பட்ட வானரர்களுக்கெல்லாம் ராமகைங்கர்யம் இல்லாமற்போகும் ஆகவே ஸ்ரீராமர் வாலியைக் கொன்ருர்

ஏன் அத்ருச்யராக விருந்து கொல்ல வேண்டும் என்ருல் முதலில் சுக்ரீவன் ராமரை சரணமடைந்து விட்டான். வாலியைக் கொன்று ராஜ்யத்தைத் தரவேண்டும் என்றும் வேண்டினுன். ராமரும் பிரதிக்ஞை செய்துவிட்டார் இதெல்லாம் ஆன பிறகு ஸ்ரீராமர் வாலியின் கண்ணிற்பட்டால் பக்தனன வாலியும் முன்பின் யோசிக்காமல் ராமரின் பாதங்களில் விழுந்து சரணமடைந்து விடுவான். சரண

(தொடர்ச்சி 7 பக்கம் பார்க்க)

ஸ்ரீராமரது ஸாந்நித்ய விசேஷம்

(திருவல்லிக்கேணி சலபதி பி. எஸ். சுப்ரம் மணிய அய்யர்)

ஸ்ரீராமர் மஹாவிஷ்ணுவின் அவதாரம். அங்கங்கே அவசியம் நேர்ந்த காலத்தில் தாம் மஹாவிஷ்ணு என்பதை தமது பக்தர்களுக்கு வெளியிட்டார். உதாஹரணமாக. உத்தமபக்தனை ஹநுமான் முதல்முதல் தம்மை வந்து பார்த்து, அதிகபக்தியுடன் நமஸ்கரித்து, விதிப்படி பூஜித்தபோது ஸ்ரீராமர் "நான்கு புஜங்களுடன் திவ்யதர்சனம் அளித்தார்,, (கோவிந்தராஜ வியாக்யானம்: ஹநுமதோபக்தத்வேன தஸ்ய சதுர்புஜ வேஷேணத்ருச்யோ பவத்). பிறகு 24ம் ஸர்க்கத்தில், தரையில் வாலி விழுந்து கிடப்பதாகக் கேள்வியுற்று அங்கதனுடன் ஓடிவந்து தாரை தானும் தரையில் விழுந்து கதறியதைப்பார்த்த சுக்ரீவன் தானும் அடங்காத துக்கத்தை அடைந்து பிரபுவினிடம் வந்து, தான் அக்நிப்ரவேசம் செய்ய வேண்டும், உத்தரவு அருளுக, என்றுப்ரார்த்தித்த போது, ஸ்ரீராமர் அதைக்கேட்டு, கண்களில் நீர்ததும்ப துக்கித்து சற்று மௌனமாயிருந்தார். பிறகு, புலம்பும் தாரைக்கு ஆறுதல் சொல்லி அவள் மனம் சாந்தமடையச் செய்ய வேண்டுமென்ற ஊக்கத்துடன் அவளைப் பார்த்தார்.

(ஸமுத்ஸ்ஸுகஸ்தோத ததர்சதாராம்) இதை கவனித்த வானரர்கள் தாரையை தூக்கி விட்டார்கள் அவள் தேககாந்தியால் சூர்யனைப்போல் ப்ரகாசித்துக் கொண்டு நிற்கும் ஸ்ரீராமரைப்பார்த்தாள். அவர்தான் ராமரென்று தன்மனத்துள் எண்ணினுள். கணவன் இறந்த துக்கத்தால் அழுது கொண்டு ராமர் நின்ற இடத்துக்கு வந்து அவரை நோக்கி பின்வருமாறு மொழிந்தாள்.

(24ம். ஸர்க்கம்- 31ம் ச்லோகம் த்வமப்ரமேயச்ச:) தாங்கள் அளவிடக் கூடாத மஹிமை பொருந்தி, கிட்ட வொண்ணுதவராயும், இந்த்ரியங்களை வசப்படுத்தியவராயும், ச்ரேஷ்டமான தர்மத்தை யுடையவராயும், நாசமில்லாத கீர்த்தியை உடையவராயும் சமர்த்தராயும், பூதேவியைப் போல் பொறுமையுடைய வராயும் இருக்கிறீர். (ஷை ஸர்க்கம். 32ம் ச்லோகம். மனுஷ்யதேஹாப்யுதயம்) தாங்கள் மானிட தேகத்தை விட்டு, தேவ வடிவே பூண்டு என் முன் காணப்படுகிறீர்.

இவ்விதம் தாரை கூறியது வெகு ஆச்சரியமல்லவா? அஸம்பா விதமென்று கூட நினைக்கும்படி இருக்கிறதல்லவா? ஆயினும் கோவிந்த ராஜாள் இதில் ஆச்சரியமானதும், அஸம்பா விதமானதும் யாதுமில்லை என்று விளக்கி, வெகு அழகாய் வியாக்யானம் செய்துள்ளார். அது பின்வருமாறு:—

ஏவம் ராமஸ்ய திவ்ய தேஜோ விசேஷ தர்சனேன-ஸ்ரீ ராமருடைய திவ்ய தேஜஸ் மஹிமையை தாரை பார்த்து, ப்ரமித்து சற்று தன் துக்கத்தை மறந்து, அவரை வர்ணித்து. பிறகு தனக்கு ஸஹஜமான அஞ்ஞானத்திற்கு உட்பட்டு மறுபடியும் ப்ரலாபிக்கிருள்.

மேலும், தனிச்லோகி என்றவ்யாக்யானத்தை இயற்றியுள்ள பெரியவாச்சான் பிள்ளை பின்வருமாறு 24ம் ஸர்க்கம் 3½ச்லோகத்துக்கு அர்த்தம் செய்துள்ளார்:

"விசுத்த ஸத்வா தத்ஸந்நிதி மாகாத்ம்யேன" ஸ்ரீராமருடைய ஸந்நிதி மகிமையால் கோபமும், பகையுணர்வும் நீங்கி சுத்த சாந்த ஸ்வபாவம் மேலிட்டு அவரை நிந்திக்

இராமேஸ்வரம் தர்மஸம்ரக்ஷண வாலிபர் ஸங்கம் தீர்மானங்கள்.

ஆஸ்திக ரத்னம் சிறுவாளை ஜமீன்தார் ஸ்ரீ ப. சி. முத்துச்செட்டியார் அவர்கள் காலமானது பற்றி வருந்துவதுடன் அன்னவர் குடும்பத்தாருக்கு இக்கூட்டம் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

காலஞ்சென்ற ஷை யார் ஞாபகார்த்தமாக இந்த சங்கத்தினுதரவில் இலவசவாசக சாலை ஏற்படுத்தவேணுமென்றும் இதுவிஷயமாக தலைவர் காரியதரிசிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேணுமாயும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கொச்சி சட்டஸபையில் நிறைவேற்றியுள்ள சாரதா சட்டத்திற்கு கனம் ஸ்ரீ கொச்சி மகாராஜா அவர்களும், ஸம்பந்தப்பட்ட உத்யோகஸ்தர்களும் அநுமதி (அஸெண்டு) கொடுக்கக்கூடாதென்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இராமேசுவரம் தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்களிடமே இருக்கவேணுமென்று சென்னை சர்க்கார் ஸமீபத்தில் விடுத்துள்ள உத்தரவும் ஏற்கனவே உள்ள போட்டார் நோட்டிபிகேஷனை ரத்து செய்த விஷயமாய் இக்கூட்டம் சென்னை சர்க்காரை மிகவும் பாராட்டுகிறது. மேலும் ஷை நோட்டிபிகேஷனை ரத்து செய்ய வேண்டி, ஸகல முயற்சியும் எடுத்துக்கொண்ட ஷை தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்களுக்கு இக்கூட்டம்சந்தோஷத்தைதெரிவித்துக்கொள்கிறது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் ஸ்ரீ ஆசாரியசுவாமிகள் ஸன்னிதானம் ஆக்ஞை பிரகாரம் இந்த சங்கத்தின் பெயரை தார்மீக யுவச் சங்கமென்று மாற்றி இந்த பெயரை ஸமீபத்தில் வருகிற வருஷாந்திர விழாவன்று தினம் முதல் அமுலுக்கு கொண்டுவரவேண்டியதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. —— ந. கி.

கவந்தவள் அவரை ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தாள். கோவிந்த ராஜாளும் இந்தச் லோகத்துக்கு இவ்விதமாகவே வியாக்யானம் எழுதியுள்ளார்.

தாரைக்கு இவ்விதம் தமது பரத்வத்தைக் காட்டியருளிய பிரபு வாலிக்கும் அந்த திவ்ய தேஜோரூபத்தைக் காட்டினுரா? இல்லையா? காட்டினுல், எப்போது அவ்விதம் செய்தார்? உத்தரம் பின்வருமாறு:

வாலியின் மேல் பாணத்தைப் போடுவதற்கு முன்னுவது, போடும் போதாவது பிரபு தம் நிஜஸ்வரூபத்தை அவனுக்குத் தோற்றுவிக்கவில்லை. பாணத்தால் அடிபட்டு அவன் கீழே விழுந்த பிறகுதான், தன் நிஜஸ்வரூபத்தை அவன் பார்க்கும்படி செய்தார்.

ஏன் முன்னுலேயே அவன் பார்க்கும்படி செய்யவில்லை? ஏனென்றுல் வாலி ஸ்ரீராமருக்கு துஷ்கிருதனுகி அவராலே கொல்லப் படவேண்டுமென்று பிரபு அவதாரம் செய்தகாலதநில் ஸங்கல்பித்தார். இவ்விதம் கொல்லப்படுவதற்காகவே இந்த்ரனுல் ச்ருஷ்டிக்கப்பட்டான் என்று நாம் கொள்ளல் வேண்டும் இந்த உண்மையை வாலியும் தெரிந்து கொண்டுதான் இறப்பதற்குமுன் பிரபுவினிடத்தில் சொன்ன கடைசியான வாக்யத்தில் அதை வெளியிட்டான். 18ம் ஸர்க்கம் 58ம் ச்லோகம்: "த்வத்தோஹம் வதம் ஆகாங்க்ஷன்" தங்களுடைய கையால் மரணமடைய வேண்டுமென்றே, தாரை சொன்னதையும் நிராகரித்து, சுக்ரீவனுடன் போர்புரிய வந்தேன் என்று சொல்லி மௌனமாயிருந்தான்,

இராமேஸ்வரம் ஸ்ரீ ஜயந்தி.

25—8—40உ இரவு 8½ மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு ஓர் விசேஷ பஜனை நடைபெற்றது. அவ்வமயம் அன்னுர் பாகவத சிகாமணிகள் ஸ்ரீ சுப்பா பட்டர் ஸ்ரீ சீனிவாச பாகவதர், எச். கிருஷ்ண முதலியாரவர்களால் விசேஷ வாத்ய கோஷ்டிகளோடு பஜனை அதி விமரிசையாக நடத்தப்பட்டது. உள்ளூர் பிரமுகர்களும் அசலூர் பிரமுகர்களும் ஷை பஜனையில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் சார்பாக வந்தனம் உரித்தாகுக. கோபால சாஸ்திரிகள்

மீண்டும் அஹிம்ஸைக் குழப்பம்

டெல்லித்தீர்மானம் ரத்து?

ஸ்ரீ நேரு விளக்கம்

ஸ்ரீமான் ஜவஹர்லால்நேரு 27உ யன்று பம்பாயில் பேசுகையில் பின்வருமாறு கூறினுர்:—

"காந்திக்கும், காரியக் கமிட்டிக்கும் சில அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டன. அவைகளைப்பற்றிப் பலர் மிகைப்படுத்தி பேசினுர்கள்

இப்போது டெல்லித்தீர்மானம் (அஹிம்ஸையைப்பற்றியது) வார்தா தீர்மானத்தால் ரத்தாகி விட்டது அதனுல் ஒரு பெருந்தடை நீங்கி விட்டது. காங்கிரஸானது அஹிம்ஸையையே உறுதியாகப்பின்பற்றி நடக்கிறது. பூர்ண ஆயுதபரிஹாரணமே காங்கிரஸின் தேசியக்கொள்கையாகும்"

வாலிவதம்.

(6வது பக்கம் தொடர்ச்சி)

கதனைக் கொல்வது யுக்தமல்ல அவனுக்கும் அபயம் கொடுத்தால் முதலில் சரணமடைந்த சுக்ரீவனைக்காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் ராமர் செய்த பிரதிக்ஞையும் வீணுகிவிடும். இதையே ஸ்ரீராமர் பின்வருமாறுயோசித்த முடிவில் அவன் கண்ணிற்படாமலேயேயிருந்து கொன்றுர்.

இம்மாதிரி மறைந்து கொன்றதில் ஸ்ரீராமருக்குப் பாபமே கிடையாது.

प्रायश्चित्तं च कुर्वन्ति तेन तच्छाम्यते रजः ।

ஏன்ற பதிலிலும் இதை விளக்கியிருக்கிறுர். அதாவது ஓர் அரசன் விதிக்கும் போது விதிக்கும் முறையில் ஏற்படும் பாபமோ தண்டனை விதப்பதினுலேயே போய்விடுகிறது.

வாலியும் ஸ்ரீராமரை ஏன் அதிருசியராகக் கொன்றீர் எனக்கேட்டதும் தவறே. ஏனெனில் அம்மாதிரிக்கேட்டது ஓர் குற்றவாளியை சி. ஐ. டி. ஆபீஸர் ஒருவர் கைது செய்யும் போது அந்தக் குற்றவாளி அவரைப் பார்த்து 'நீர் உமது போலீஸ் உடையை ஏன் அணிந்துகொள்ளவில்லை? அதை அணிந்தல்லவோ நீர் என்னைக்கைது செய்ய வேண்டும்." என்று கேட்பதற்குச் சமமாயிருக்கிறது!

மேற்கண்டவாறு ஸ்ரீராமர் மறைவிலிருந்திருப்பினும் சரி எதிரில் இருந்திருப்பினும் சரி அதிருசியராகவே கொன்றுர் என்று ஏற்பட்டது. இப்பேர்ப்பட்ட அதிருச்யத்வம் (நீர் திருஷ்டிகோசரமாயிருந்தீர் ஆயினும் குடிமயக்கத்தால் நான் உம்மை செவ்வையாகக் கவனிக்கவில்லை) என்று ஸ்ரீமான் பி. எ. சுப்பிரமணிய ஐயர் எழுதியிருப்பதிலிருந்தும் வித்தமாகிறது.

மனிதன் உஜ்ஜீவிக்கும் வழி

திப்பிராஜபுரம் ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபாவில் 24-8-40 சனிக்கிழமை தினம் பரமவித்வத் சிகாமணியான வரகூர் ஸ்ரீ வி. எஸ். வெங்கட்ரும சாஸ்திரிகள் அவர்கள் மிகவும் கம்பீரமாயும் பரம உத்ஸாகத்துடனும், பலவித ரஸமான திருஷ்டாந்தங்களுடனும் மஹத்தானதோர் ப்ரஸங்கம் செய்தார்கள். அதன் ஸாரமாவது :—

எவரும் மேல் மேலும் விருத்தியைத்தான் கோருகிறார்கள். கடைசியாக ஸர்வஞ்யத்வம் ஸர்வஸ்வதந்திரத்வம் ஸர்வசக்தத்வம் இதுகள் சித்தித்தால் தான் எல்லையை கிட்டினதாகும். இதில் ஸர்வஞ்க்யராயும் ஸர்வஸ்வதந்திரராயும் ஸர்வ சக்தராயும் போற்றப்படுபவரும் சாஸ்திரங்களில் நிரூபிக்கப் பட்டிருப்பவருமாயுள்ள ஈச்வரன் ஒருவரே ஆவர். நமக்கோ ஒன்றும் தெரியவில்லை. நடந்தது ஞாபகமுமில்லை, நடத்தவேண்டியதற்கும் ஒருவிதமான திட்டமான ஏற்பாடுமில்லை. நம் இஷ்டப்படியும் ஸ்வதந்திரமாயும் ஒன்றும் செய்ய முடிகிறதுமில்லை. ஆதலால் நாம் அவ்வீச்வரன் மாதிரியோ அல்லது அவராகவோ ஆக வேண்டும். ஈச்வரனே கருணையினால் உபதேச ரூபமாக செய்தருளிய வேதாதி சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற ப்ரகாரம் ப்ரத்யய புத்தியுடன் அனுஷ்டித்து வரவேண்டும்.

கீதையில் ஸ்ரீபகவான் (1) அஞ்ஞானியென்ன (2) அச்ரத்தையுள்ளவனென்ன (3) ஸம்சயாத்மாவென்ன (ஸந்தேக புத்தி) இவர்கள் பாபிகள். மேல் கண்ட 3 பேர்களில் முதல் பூர்வ புண்ய வசத்தால் ஒருவேளை ஸுகமாக இருக்கலாம், பரலோகத்தில் தான் கஷ்டம், 3-வது பேர்வழிக்கு இஹத்திலும் எதைத் தொட்டாலும் சந்தேகப்படுகிற வனைகயால் ஸுகலேசம் கூட கிடையாது. பரலோகம் என்பது ஒன்று உண்டா? இல்லையா? என்கிற முடிவடையாத ப்ரசனை அவனிடம் உள்ளதால் அதற்கு வேண்டியதை அவன் ஒருநாளும் செய்து கொள்ளப் போவதில்லை பரத்திலும் கஷ்டம் தான். இவனை மஹாபாபி என்று தனித்தும் சொல்லியிருக்கிறது இதற்கு ஒருவன் தன் தகப்பனார் ச்ராத்தத்தன்று தான் செய்ததாக நினைத்த ஒரு பிசகுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளப் போய் எப்படி தன்னுடைய அனவரதம் ஓயாததான சந்தேக எழுச்சியினால் ச்ராத்தத்தையே கஷ்டமாகச் செய்துகொள்ள நேரிட்டது (பஞ்சகவ்ய ப்ராசனம் செய்து, ஸமகாலத்தில் பிண்டப்ரதானம் செய்ய வேண்டிய இடத்தில் தவறி பிண்டத்தை சாப்பிட்டு விட்டு பஞ்சகவ்யத்தை கீழே கொட்டியது) என்ற திருஷ்டாந்தத்துடன் த்ருடமான நம்பிக்கை ஈச்வரனிடத்திலும் இன்னும் எதிலும் ஏற்பட்டால் தான் ஸுகமாய் காலம் தள்ளலாம் என்று சொன்னார்கள்.

அதற்காக திடீரென்று மேல்படிக்கும் ஒரேயடியில் ஏறவும் முடியாது. நாம் வ்யவஹார தசையிலிருக்கிறோம். வ்யாவஹாரிகம், பாரமார்த்திகம் என்று இரண்டு. ஒருவனிடம் ஐந்து ரூபாய் பணமாக இருக்கிறது அதை அவன் தண்ணீரில் நனைக்கவும், விளக்கில் காட்டவும், காற்றில் உலத்தவும் முடிகிறது. அதனால் ஒருவிதமான மாறுதலும் ஏற்படுகிறதில்லை. அதை கொடுத்து 5 ரூ நோட்டாக மாற்றின பிறகு அந்த கிடைத்த நோட்டைக்கொண்டு மேலே சொன்ன காரியங்கள் செய்வானேயாகில் முதலுக்கு மோசம் வந்து விடுகிறது. வ்யவஹாரத்தில் தான் நோட்டு செல்லும். பரமார்த்தத்தில் உபயோகப்படாது.

அஞ்ஞானத்தை விலக்கி, ஞான ஸம்பாதனத்திற்கு நமது சாஸ்திரங்களில், காம்ய கர்மாசரணம், நிஷ்காம கர்மாசரணம், ஸாதன பக்தி, ஸாத்ய பக்தி, பரோக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானம், என்கிற கிரமங்கள் சொல்லியிருக்கின்றன. மேல்கண்ட படிகளில் எந்த நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை நன்கு தெரிந்துகொண்டு அதற்கு அடுத்தபடிக்கு மேற்கொண்டு முயற்சியைவிடாமல் செய்யவேண்டியது.

நாம் இந்த தேகத்தை நாமாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதைத்தான் அஞ்ஞானமென்பது இது சொந்த இடமல்ல. இது வந்த இடம். அதாவது யாத்திரையில் சத்திரம் சாவடிகளில் தங்குவது போல் வந்த இடத்தில் அமுல், காகிதா முதலியவைகள் செலுத்தவும் கூடாது. செலுத்தினால் நடக்கவும் நடக்காது. ஆனவரையில் காரியத்தை ஸம்க்ஷேபமாகச் செய்துகொண்டு, மேற்கொண்டு ஆகவேண்டியதற்குத் தான் யத்னம் செய்யவேண்டும். நமக்கு ஈச்வரன் ஞானேந்திரியங்கள் 5, அதற்கு அதிபதி மனசு, கர்மேந்திரியங்கள் 5, அதற்கு அதிபதியாக ப்ராணன், ஆக 12 இந்திரியங்களை கொடுத்து ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கோளகங்களுடன் தந்திருக்கிறார். (மூக்கு, வாய் இரண்டுக்கும் ஒரே கோளகம்—காக்கை; கண்ணும், காதும் ஒன்று—பாம்பு; இது மாதிரி இல்லாமல்) இதுகளைத் தன் வசப்படுத்தி ஞானத்தைப் பெறுவதற்குத் தன் இந்த மனுஷ்ய ஜன்மாவை கொடுத்திருக்கிறார். எப்படி ராஜாவினுடைய சேவகன் ஆற்றைத் தாண்டும் பொழுது, சுழலிலும், ப்ரவாகத்திலும் அகப்பட்டு இழுத்துக்கொண்டு போகப் படும்பொழுது, ராஜாவின் சேவகனை குறித்த ஆக்ஞை வ்யார்த்தமாகப் போகுமோ; அந்த சேவகனும் எஜமானனை ராஜனின் ஆஞ்ஞையைப்படி நடத்த முடியாதோ, மீறித் தான் போக நேரிடுமோ; அதே ப்ரகாரம் நாம் ஈச்வரனின் ஆணையை கைவிட்டு, காமக்ரோதாதி ப்ரவாஹத்தில் மனசினால் இழுக்கப்பட்டு கெட்டலைகிறோம். அதைவிட்டு மேட்டுக்கு வந்ததால் தான் ஈச்வரனுடைய கட்டளைக்குக் கட்டுப்பட முடியும்.

இந்த மனுஷ்ய ஜன்மா, அதிலும் ப்ராஹ்மண ஜன்மா மிகவும் உயர்வானது. இந்த சரீரம் போகத்துக்கும் மாத்திரம் ஏற்படவில்லை. எந்தப்ராணிகள்தான், ஐந்து தான் போகம் அனுபவிக்கவில்லை. கஷ்டப்பட்டு ச்ரமப்பட்டு உத்தமகதியடையவே இந்த உயர்தத ஜன்மா லபித்திருக்கிறது. த்ரவ்யார்ஜனம் பண்ணினாலும் தர்மப்ரவிருத்தியில்செலவழித்து மோக்ஷாந்தபர்யந்தசாதகமாக ஆக்கிக்மொண்டு எல்லாரும் பரமச்ரேயஸ்ஸாக இருக்க வேண்டியது. என்று சொல்லி, மாப்பிளைத்தோழன் என்ற வ்யாஜத்தோடு வந்தவன் எப்படி உபய தரத்தார்களும் விசாரிக்க ஆரம்பித்தவுடன் மறைந்து விட்டானோ, அது போல் விவேகத்தை அடைந்து ஆத்மா, அனாத்மாவை விசாரணம் செய்தால், அஞ்ஞானம் விலகிப்போம்; என்று வெகு அழகான திருஷ்டாந்தத்துடன் உபன்யாஸத்தை உபஸம்ஹாரம் செய்தார்கள்.

திருநகரியில்

ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி

மகாத்மிய பிரசங்கம்

ஆழ்வார்திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான எக்ஸிகூடிவ் ஆபீஸரின் வேண்டுகோளின்பேரில் 25—8—40 திங்களன்றும் மறுநாளும் கோயில் கோபுரவாசல் மண்டபக்குறட்டில் வித்வான்கள் இளையவில்லி ஸ்ரீ சடகோபாசாரியார், ராமகிருஷ்ணய்யங்கார் இருவராலும் ஸ்ரீ கிருஷ்ண மகாத்மியச்சிறப்பு விசேஷம் பற்றி மிக ரஸமாக உபந்யாஸம் செய்யப்பட்டன. பலரும் வந்து கேட்டு மகிழ்வெய்தினர். தேவஸ்தான உள்துரை மானேஜர் ஸ்ரீமான் எஸ். ராகவய்யங்கார் வந்தனோபசாரம் கூறினர். எக்ஸிகூடிவ் ஆபீஸர் ஸ்ரீஎல். ஆர். குருசாமி நாயுடு ஆர்யதர்மம் கரஸ்பாண்டெண்ட் ஸ்ரீ அ. தே. ராமாநுஜய்யங்கார் மற்றும் பல பிரமுகர்களும் விஜயமாயிருந்தனர். ந. வி.நி

ஓர் சந்தேகம்

ஒருவர் தசராத்ரஞாதி மரண தீட்டைத் தெரிந்துகொண்டும் ஷடி ஆசௌசத்துடன் ஆலயங்களுக்குப் போய் உத்ஸவாதிகளில் கலந்து வந்ததற்கு பிராயச்சிமுண்டா? அனுஷ்டிக்க வேண்டிய தீட்டை விட்டதற்கும் பிறகு அதிக்ராந்தமாய் தீட்டு அனுஷ்டித்து தர்ப்பணம் முதலானது செய்ததற்கும் பிராயச்சித்தமுண்டா?

ஒரு சந்தேகி.

குழந்தைகளுக்கு வியாதி எல்லாம் சேர்க்கை ஆஹாரத்தினால் தான்.

தாய்ப் பாலில் வளரும் குழந்தைக்கு கட்டிமாந்தம் முதலிய நோய்கள் வாரா.

ஆயுர்வேதாசார்ய

V. B. நடராஜ சாஸ்திரி அவர்களின்

பயஸ்யா

தாய்ப் பாலை அளவிலும் ஸாரத்திலும் அபிவிருத்தி செய்யும் உத்தம ரஸாயனம்.

விலை ரூ 2—4—0 தான்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும் அல்லது நேரில்

'ஆத்ரேய'

ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.

பயஸ்யா— புஸ்தகம் வேண்டுவோருக்கு இனமாய் அனுப்பப்படும்.

ஆலயப் பிரவேசம்.

'इत:कोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।'

"மதக்கொள்கைகள் எவ்வண்ணம் சீர்குலைக்கப்பட்டால் தான் எனக்கென்ன? என் உடம்பை யாரும் வாளால் வெட்டவில்லையே!" என்று வாளாயிருப்பவனே மூடன். அசட்டை தூக்கத்தை உதறித்தள்ளி மத விழிப்பை உண்டுபண்ணி ஆத்ம ஸ்வராஜ்யத்தில் பிரவேசிக்க மார்க்கத்தைப் புகட்டுவது ஆலயப்பிரவேச புத்தகம் ஒன்றே. பண்டிதர்களால் மிக புகழப் பெற்றது. 6-அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்து பிரதியை அடயமுந்துங்கள்.

கிடைக்குமிடம்:—

கண்டமங்கலம்

பாலசுப்பிரமணிய அய்யர்

10, பிலாத்தோப்பு, மைலாப்பூர், மதறாஸ்

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.